முருகப்பெருமான் துணை

**மகான் எறிபத்த நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.07.2022, சனிக்கிழமை

1. சன்மார்க்க வழிகாட்டும் அரங்கா
   சங்கடம் போக்கி காத்திட
   என்மார்க்கம் வாரீர் என அழைக்கும்
   ஏழாம்படைவீட்டு மாதவ அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது மிதுன திங்கள்
   வரங்களென மூவாறு திகதி காரி வாரம்
   வழங்குவேன் அருளாசி தன்னை
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 18 நாள், 02.07.2022 சனிக்கிழமை)
3. தன்னையே எறிபத்த நாயனாரும்
   தரணியே பாதுகாப்புற உரைப்பேன்
   அண்ணலாக அரங்கன் காட்டும்
   ஆற்றல் மிக்க வழிமுறை தனை
4. முறையாக மக்கள் ஏற்று
   முழுமை ஞானமாகப் பயில
   குறைவின்றி சைவ நெறியை
   குவலயமே ஏற்று பின்தொடர
5. தொடரவே தொல்லைகள் விலகும்
   தொற்று நச்சுக்கருமி எனும்
   இடரும் சிக்கலும் அகலும்
   எங்கும் பாதுகாப்பு பலம் பெருகும்
6. பெருக மக்களிடை மனபலம்
   பிரணவ சக்தியாகப் பரவி
   தரும குணவும் தயவாகக் கூடி
   தன்னார்வத் தொண்டுகளும் பெருகும்
7. பெருகவே சமூகத்தை நசுக்கும்
   பிரச்சினைகள் பெரும் அவலங்கள்
   வருமுலகில் முழுமைபட அகன்று
   வையகம் வளர்ச்சிநிலை காணும்
8. காணவே இந்த மாற்றத்தை
   கலியினில் நடத்திக் காக்கவே
   ஞானதேசிகன் அவதாரம்தானும்
   ஞானமாக எடுத்து இருக்க
9. இருக்கவே பிரணவக் குடிலின்
   இணையிலா சக்தி அறிந்து
   கருத்தாக உலக மக்கள் ஏற்று
   கந்தா என வணங்கி வந்து

10. வந்துமே மகாமந்திர தீட்சை
வணங்கி அரங்கன் கரம்பட
இந்த உலகோர் ஏற்றுவிட
எங்கும் ஆறுமுகனார் சக்தி

11. சக்தி பரவி பெரும் மாற்றம்
சரவண சோதி சூட்சுமமாக
சக்தி கூடி உலகமதும் அடையும்
சாற்றிய அருளாசி முற்றே

–சுபம்–